TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- நூல்கள் ( 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை )

- தமிழ்த்தாய் வாழ்த்து – மனோன்மணியம் பெ.சுந்தரனார்
- தேசிய கீதம் – மகாகவி இரவீந்திர நாத் தாகூர்

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

- நாலடியார் ( நாலடி நானூறு ) ,நாண்மணிக்கடிகை,இன்னா நாற்பது,இனியவை நாற்பது ,திரிகடுகம், ,ஆசாரக்கோவை ,பழமொழி,சிறுபஞ்சமூலம்,ஏலாதி,திருக்குறள் ,முதுமொழிக்காஞ்சி ,ஐந்திணை ஐம்பது ,ஐந்திணை எழுபது,திணைமொழி ஐம்பது,திணை மாலை நூற்றைம்பது ,கார் நாற்பது,கைந்நிலை ,களவழி நாற்பது

## பதினெண் மேற்கணக்கு நூல்கள்

- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவை பதினெண் மேற்கணக்கு நூல்கள்

## பத்துப்பாட்டு

திருமுருகாற்றுப் படை ,குறி ஞ்சிப் பாட்டு,மலைபடுகடாம்,மதுரைக் காஞ்சி,,முல்லைப்பாட்டு ,நெடு நல் வாடை,பட்டினப்பாலை,பெரும்பாணாற்றுப் படை,பொருநர் ஆற்றுப்படை ,சிறுபாணாற்றுப் படை

## எட்டுத்தொகை

- நற்றிணை ,குறுந்தொகை , ஐங்குறுநூறு , அகநானூறு , புறநானூறு ,கலித்தொகை ,பதிற்றுப்பத்து , பரிபாடல்
- இவற்றுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றிய நூல்களாகும்,
- பரிபாடல் அகப்புறப்பாடல்களைக் கொண்ட நூல், எஞ்சியவை அகப்பொருள் நூல்களாம்,

## ஐம்பெருங்காப்பியங்கள்

- சிலப்பதிகாரம் , மணிமேகலை ,சீவகசிந்தாமணி ,வளையாபதி , குண்டலகேசி

## ஐஞ்சிறுகாப்பியங்கள்

- சூளாமணி ,நீலகேசி ,உதயண குமாரகாவியம் ,யசோதர காவியம் ,நாககுமார காவியம்

## திருக்குறள்

- திருக்குறள் குறள் வெண்பாக்களால் அமைந்த நூல்
- அறம் 38 அதிகாரங்கள்
- பொருள் 70 அதிகாரங்கள்
- இன்பம் 25 அதிகாரங்கள் என 3 பிரிவுகள்
- 9 இயல்கள்
- 133 அதிகாரங்கள்
- அதிகாரத்திற்கு 10 குறள்கள்

சிவா 8015118094

- மொத்தம் 1330 குறள்கள்
- பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று
- உலகப்பொதுமறை
- 107 மொழிகளில் மொழிபெயர்ப்பு ( ஆங்கிலம் , கிரேக்கம் , இலத்தீன் உட்பட)
- வீரமாமுனிவர் இலத்தீனிலும் , ஜி.யூ.போப் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தனர்
- உருசிய நாட்டில் அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையில் உள்ள சுரங்கப் பாதுகாப்பு பெட்டகத்தில் திருக்குறள் உள்ளது
- இங்கிலாந்து நாட்டு காட்சிச் சாலையில் திருக்குறள் விவிலியத்துடன் வைக்கப்பட்டுள்ளது
- மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரைதான் திருக்குறள்
- நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி , ஆலும் வேலும் பல்லுக்குறுதி இதில் இரண்டு என்பது திருக்குறளையும் , நாலு என்பது நாலடியாரையும் குறிக்கிறது

**திருக்குறளின் வேறு பெயர்கள்**

- உலகப்பொதுமறை
- முப்பால்
- பொய்யாமொழி
- வாயுறை வாழ்த்து
- உத்தரவேதம்
- தெய்வ நூல்
- திருவள்ளுவம்
- தமிழ்மறை
- பொதுமறை
- திருவள்ளுவப்பயன்
- முதுமொழி
- பொருளுரை
- காலம் 31 ஆம் நூற்றாண்டு , 2013 ஆம் ஆண்டை திருவள்ளுவர் ஆண்டு 2044 என்பர் (ஆண்டுடன் 31 ஐக் கூட்ட வேண்டும் )
- திருக்குறளுக்கு உரை செய்த பதின்மர்
  தருமர் ,மணக்குடவர்,தாமத்தர்,நச்சர்,பரிதி,பரிமேலழகர், திருமலையார் ,மல்லர் ,பரிப்பெருமாள் ,காளிங்கர்
- விக்டோரியா மகாராணியார் கண் விழித்ததும் முதலில் படித்தது திருக்குறள்
- திருக்குறளைப் பாராட்டி பாடிய படலின் தொகுப்பு திருவள்ளுவ மாலை
- ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆன நூல் திருக்குறள்
- திருக்குறள் ஒரு வகுப்புக்கோ ஒரு மதத்துக்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ ஒரு நாட்டார்க்கோ உரியதன்று . அது மன்பதைக்கு – உலகுக்குப் பொது --- திரு .வி. க
- வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே இணையில்லை முப்பாலுக்கு இ ந் நிலத்தே என்றவர் பாரதிதாசன்
- ம்லையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812 ல் திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்

இரா.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- தமிழ்மாதின் இனிய உயிர் நிலை என்று உலகோரால் பாராட்டப்படும் நூல் திருக்குறள்
- அறத்துப்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களை உடையது, அது பாயிரவியல். இல்லறவியல். துறவறவியல். ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டு விளங்குகிறது
- பொருட்பால் எழுபது அதிகாரங்களையும் அரசியல். அங்கவியல். ஒழிபியல் என்னும் மூன்று இயல்களையும் கொண்டு அமைந்துள்ளது,
- காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களையும் களவியல். கற்பியல் என்ற இரண்டு இயல்களையும் கொண்டு விளங்குகிறது,
- திருவள்ளுவன் வாய் விளைத்தவற்றுள் இல்லாததில்லை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே என்று தமிழரை விம்மித முறவைப்பது இத்தெய்வநூல்
- அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள் என்று அவ்வையார் இதன் திட்பமும் நுட்பமும் கருதிப் புகழ்ந்துரைத்தார்

- தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட
  பனையளவு காட்டும் படித்தால் – **கபிலர்**

- வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார்
  உள்ளுவதெல்லாம் அளந்தார் ஓர்ந்து – **பரணர்**

- உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
  வள்ளுவர் வாய் மொழி மாண்பு – **மாங்குடி மருதனார்**

- பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
  மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே – முப்பான்
  தெய்வத் திருவள் ளுவர்செய் திருக்குறளால்
  வையத்து வாழ்வார் மனத்து, – **தேனிக்குடி கீரனார்**

- புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
  சித்தம் கலங்கித் திகைப்பதேன் – வித்தகன்
  தெய்வப் புலவர் திருவள் ளுவர்சொன்ன
  பொய்யில் மொழிஇருக்கும் போது
  செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே
  சிந்தனை செய்வாய் தினம்
  நீதித்திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்
  ஓதித்தொழுது எழுக ஓர்ந்து – **கவிமணி**

**நற்றிணை**

- நன்மை+திணை = நல்+திணை = நற்றிணை
- எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக அமையப்பெற்றது நற்றிணை,
- இந்நூல் சங்ககாலப் புலவர் பலரால் பல்வேறு காலத்தில் பாடப்பெற்ற நானூறு அகவற்பாக்களின் தொகுப்பாகும்,
- நற்றிணையில் உள்ள பாக்கள் ஒன்பதடி ச்சிறுமையும் பன்னிரண்டடிப் பெருமையும் கொண்டவை, அவை அகப்பொருள் பற்றிய பாடல்கள் எனினும் அவற்றுள் புறப்பொருள் செய்திகளும் தமிழக வரலாற்றுக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன,
- இதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்,
- இத்தொகை நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த மாறன் வழுதி என்னும் பாண்டிய மன்னன் ஆவான்

www.Padasalai.Net



- 400 பாடலகள் . பாடியவர்கள் மொத்தம் 275

**குறுந்தொகை**

- குறுமை+தொகை =குறுந்தொகை, இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று,
- நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உடைய ஆசிரியப்பாக்களால் ஆகிய நூல்,
- இதும் அகத்திணை பற்றியதேயாம்,
- இதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்,
- இதன் கண் நானூற்றிரண்டு பாடல்கள் உள்ளன,
- தொகுத்தவர் : பூரிக்கோ
- இல்வாழ்க்கை , ஒழுக்கம் , மகளிர் மாண்பு , அறவுணர்வு ஆகியவற்றை அறியலாம்

**ஐங்குறு நூறு**

- ஐந்து+குறுமை+நூறு = ஐங்குறுநூறு
- மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்ட அகவற்பாக்களால் தொகுக்கப்பெற்ற அகப்பொருள் நூலாகும்,
- திணை ஒன்றற்கு நூறு பாடல்களாக ஐந்து திணைகளுக்கும் ஐந்நூறு பாடல்கள் உள்ளன, அவற்றுள் குறிஞ்சித் திணைப்பாடல்களைக் கபிலரும் முல்லைத் திணைப் பாடல்களைப் பேயனாரும் மருதத் திணைப் பாடல்களை ஓரம் போகியாரும் நெய்தல் திணைப் பாடல்களை அம்மூவனாரும் பாலைத்திணைப் பாடல்களை ஓதலாந்தையாரும் பாடியுள்ளனர், இச்செய்தியை "மருதமோ ரம்போகி நெய்த லம்மூவன் கருதுங் குறிஞ்சி கபிலன் – கருதிய பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே நூலையோ தைங்குறு நூறு என்னும் பாடல் உணர்த்துகின்றது,
- ஐங்குறு நூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலையும் பாரதம் பாடிய பெருந்தேவனாரே இயற்றியுள்ளார்,
- இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்,
- தொகுப்பித்தவர் சேர மன்னன் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை ஆவார்,
- ஒவ்வொரு திணையிலும் உள்ள நூறு பாடல்களும் பத்துப் பத்துப் பாடல்களாகத் தனித்தனித் தலைப்புகளின் கீழ்ப் பகுத்தமைக்கப் பட்டுள்ளன,

**புற நானூறு**

- புற நானூறு = புறம் + நான்கு + நூறு . எட்டுத்தொகை நூலகளுள் ஒன்று . புறம் பற்றிய 400 பாடல்களின் தொகுப்பு . புறம் என்பது மறம் செய்தலும் அறம் செய்தலும் ஆகும் . தமிழ் மன்னர்களின் அற உணர்வு, வீரம் , கொடை , ஆட்சி சிறப்பு , கல்விப்பெருமை, புலவர்களின் பெருமிதம் , மக்களின் நாகரிகம் , பண்பாடு முதலியவற்றை அறியலாம்
- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
- ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்
- வெட்சி. கரந்தை. வஞ்சி. காஞ்சி. நொச்சி. உழிஞை. தும்பை.வாகை. பாடாண். பொதுவியல். கைக்கிளை. பெருந்திணை ஆகியபுறத்திணைகளுக்குரிய துறைப்பொருள்கள் அமைந்த 400 பாடல்களை இந்நூல் கொண்டுள்ளதால் புறநானூறு என்று பெயர் பெற்றது,
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்; இந்நூலின் பாடல்கள் பல்வேறு காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகும், இந்நூலைத் தொகுத்தவர். தொகுப்பித்தவர் பெயர்கள் கிடைக்கவில்லை,
- புறநானூற்றின்கண் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன

இரா.சிவா 8015118094

## அகநானூறு

- அகம் +நான்கு+ நூறு=அகநானூறு,
- 13 அடிச் சிறுமையும் 31 அடிப் பெருமையுங் கொண்ட அகப்பொருள் சார்ந்த நானூறு அகவற்பாக்களால் தொகுக்கப்பெற்ற தொகை நூலாகும்,
- பல்வேறு காலங்களில் புலவர் பலரால் இயற்றப்பெற்று.
- மதுரை உப்பூரி குடிகிழார் மகனார் உருத்திர சன்மரால் தொகுக்கப்பட்டது,
- இந்நூலைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியாவான்,
- அகப்பொருள் நூல்கள் தமிழில் பல இருப்பினும் ‘அகம் என்றே பெயர் அமைந்த பழந்தமிழ் இலக்கிய நூல் இது மட்டுமேயாகும்,
- இந்நூலுக்கு ‘நெடுந்தொகை என்னும் பெயரும் உண்டு,
- அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது, முதல் 120 பாட்டுகள். ‘களிற்றியானை நிரை எனப்படும், அடுத்த 180 பாட்டுகள் ‘மணிமிடை பவளம் எனப்படும், கடைசி 100 பாட்டுகள் “நித்திலக்கோவை எனப்படும்,
- இந்நூலில் 1.3 என ஒற்றைப்படை எண்களாக வருவன பாலைத் திணைப் பாடல்களாகவும். 2. 8 என வருவன குறிஞ்சித் திணைப் பாடல்களாகவும். 4. 14 என வருவன முல்லைத் திணைப் பாடல்களாகவும் 6. 16 என வருவன மருதத்திணைப் பாடல்களாகவும் 10.20 என வருவன நெய்தல் திணைப் பாடல்களாகவும் அமைத்துத் தொகுக்கப்பட்டுள்ளன,

## கலித்தொகை

- கலிப்பாக்களால் அமைந்தது .
- நாடகப் பாங்கில் உள்ளது
- 150 பாடல்கள்
- குறிஞ்சி , முல்லை, மருதம் , நெய்தல் , பாலை என 5 பிரிவுகளை உடையது . கற்றறிந்தோர் ஏத்தும் கலி எனும் சிறப்புடையது
- எழுதியவர் நல்லந்துவனார் . தொகுத்தவரும் இவரே

## முதுமொழிக்காஞ்சி

- ஆசிரியர் மதுரைக் கூடலூர் கிழார் . இவர் பாடல்களை நச்சினார்க்கினியர் மேற்கோளாக பயன்படுத்தி உள்ளார்
- முதுமொழிக் காஞ்சி காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று
- வேறு பெயர் அறவுரைக்கோவை
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- ..10 அதிகாரம் .மொத்தம் 100 பாடல்கள்

## திரிகடுகம்

- திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று .100 வெண்பாக்களை உடையது . சுக்கு மிளகு , திப்பிலி ஆன மருந்துக்கு திரிகடுகம் என்று பெயர் . மன மயக்கத்தைப் போக்கும்

## திருவாரூர் நான்மணிமாலை

- திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர் நான்மணிமாலை.

சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர்மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும். முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆன மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் (வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா) ஆன நாற்பது செய்யுள்களைக் கொண்டது.

**திருச்செந்திற்கலம்பகம்**

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் நூல், தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- கலம்பகம் = கலம் + பகம் எனப் பிரியும்.
- கலம் – பன்னிரண்டு; பகம் – ஆறு எனப் பதினெண் உறுப்புகளைக் கொண்டது.
- பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது.

**முக்கூடற்பள்ளு**

திருநெல்வேலிக்குச் சற்று வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல். இதற்கு ஆசூர் வடகரை நாடு என்னும் பெயரும் உண்டு. தென்பால் உள்ள பகுதி, சீவலமங்கைத் தென்கரை நாடு என வழங்கப் பெறுகின்றது. தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் ஊர் மருதூர். முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி, மருதூரில் வாழும் பள்ளி இளைய மனைவி. இருவரையும் மணந்து வாழும் ஒருவனின், வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பதுபோலப் பாடப்பட்ட இந்நூல், முக்கூடற்பள்ளு எனப் பெயர் பெற்றது.

**சீவகசிந்தாமணி**

- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி. இந்நூலின் கதைத் தலைவன் சீவகன். அவன் பெயரை இணைத்துச் சீவகசிந்தாமணி என இந்நூல் பெயர் பெற்றது என்பர். இந்நூலுக்கு மணநூல் என்னும் வேறு பெயரும் உண்டு.
- சிந்தாமணி என்பதற்கு ஒளிகுன்றாத மணி என்பது பொருள், குன்றுதல்லாத அழகு தமிழ்நடை பெற்றிருப்பதாலும் தமிழ் மாந்தர் தம் நெஞ்சில் வைத்துப் போற்றுவதாலும் இந்நூல் சிந்தாமணி என்னல் தகுதியுடையதாயிற்று,
- சீவகசிந்தாமணிக்கு மண நூல் என்றபெயரும் உண்டு, இது நாமகள் இலம்பகம் முதலாக முத்தியிலம்பகம் ஈறாகப் பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டிலங்குகின்றது, விருத்தம் என்னும் பாவினத்தால் அமைந்த முதல் தமிழ்க் காப்பியம் சிந்தாமணியே, இந்நூலுக்கு உரை கண்டவர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் ஆவார்,
- சீவகன் பிறந்த பொழுது அவன்தாய் விசையைசிந்தாமணியே என்று அவனை அழைத்தார், அக்குழந்தை தும்மிய பொழுது சீவ என்ற வாழ்த்தொலி கேட்டது, அதனால் அவன் சீவகன் என்று அழைக்கப்பட்டான், சீவகன் வரலாற்றைக் கூறும் காப்பியமாதன் அந்நூல் சீவகசிந்தாமணி என வழங்கலாயிற்று,

**தேம்பாவணி**

- தேம்பாவணி = தேம்பா + அணி = வாடாதமாலை; தேம்பாவணி = தேன் + பா + அணி = தேன்போன்ற இனிய பாடல்களாலான மாலை. இந்நூல், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்டது. இந்நூல், கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மூன்று காண்டங்களும், முப்பத்தாறு படலங்களும் உள்ளன; பாடல்களின் எண்ணிக்கை மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து.
- இத்தாலி நாட்டிலிருந்து இயேசு சபையின் குருவாகிக் கத்தோலிக்க சமயம் பரப்பத் தமிழ் நாட்டிற்கு வந்த வீரமாமுனிவர் இயற்றியளித்த பெருங்காப்பியம் தேம்பாவணியாகும்,
- இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாராகிய சூசை மாமுனிவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு தேம்பாவணி நடை பயில்கிறது,
- கத்தோலிக்கத்திருச்சபையின் கொள்கைகளும் அறிவுரைகளும் கதை வடிவாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன, எனவே இந்நூல் கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது,

www.Padasalai.Net



### திருக்குற்றாலக் குறவஞ்சி

- திருக்குற்றாலக் குறவஞ்சி. ஆசிரியர் திரிகூட ராசப்பக்கவிராயர் ஆவார். குறவஞ்சி என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது இந்நூல்.
- ஓசைநயமிக்க பாடல்கள் இந்நூலில் நிறைந்து காணப்படுகின்றன.

### நளவெண்பா

- நளனது வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூல்
- சுயம்வர காண்டம் , கலித்தொடர் காண்டம் , கலி நீங்கு காண்டம் என 3 காண்டங்களைக் கொண்டது .
- 431 வெண்பாக்கள் உள்ளன

### முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

- தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.
- இறைவனையோ நல்லாரையோ பாட்டுடைத் தலைவராகக்கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெறுவது பிள்ளைத்தமிழ்.
- பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடலென நூறு பாடலால் பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்து இயம்புவது பிள்ளைத்தமிழ்.
- இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.
- பத்துப் பருவங்களில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருபாற் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானவை. இறுதி மூன்று பருவங்களான சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆண்பாலுக்கும், அம்மானை, கழங்கு (நீராடல்), ஊசல் என்பன பெண்பாலுக்கும் உரியன.
- புள்ளிருக்குவேளூரில் (வைத்தீசுவரன் கோவில்) எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானின் பெயர் முத்துக்குமாரசுவாமி. அவர்மீது பாடப்பட்டமையால் இது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனப் பெயர் பெற்றது.

### நான்மணிக் கடிகை

- நான்மணிக் கடிகை – நான்கு மணிகள் கொண்ட கடிகை(அணிகலன்)
- பதினெண் கீழ் கணக்கு நூல்களுள் ஒன்று . ஒவ்வொரு பாட்டும் 4 அறக்கருத்தைக் கூறுகின்றன.
- ஆசிரியர் விளம்பி நாகனார்

### காந்திபுராணம்,

- ஈராயிரத்து முப்பத்து நான்கு பாடல்களைக் கொண்டது.
- இந்நூல் காந்தியடிகளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றது.

### கம்பராமாயணம்

- ஆறு காண்டங்களையுடையது. அவை: பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன. (காண்டம் – பெரும் பிரிவு; படலம் – உட்பிரிவு) .
- கம்பர், வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவித் தமிழில் காப்பியம் இயற்றினார்; இயற்றிய அந்நூலுக்கு, இராமாவதாரம் எனப் பெயரிட்டார். அதுவே கம்பராமாயணம் என வழங்கலாயிற்று. எனவே, இது வழிநூல் எனப்படுகிறது.

சிவா 8015118094

- கதை மாந்தரின் வடசொற் பெயர்களைத் தொல்காப்பிய நெறிப்படி தமிழ்ப்படுத்திய பெருமைக்குரியவர் கம்பர்.
- இந்நூலின் சிறப்புக் கருதியும் , திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் தமிழுக்குக் கதி என்பர் பெரியோர்
- இராம காதைக்கு ஆதிகாவியம் என்றும் அக்காதையை வடமொழியில் இயற்றிய வான்மீகிக்கு ஆதிகவி என்றும் பெயர் உண்டு,
- கம்பரின் இராமாயணத்தைக் கம்ப நாடகம் எனவும் கம்பசித்திரம் எனவும் கற்றறிந்த அறிஞர் களி கூர்வர், கம்பரின் யாப்பு வண்ணங்கள் நூல் நெடுகிலும் மின்னி மிளிர்கின்றன, 'வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொண்ணுாற்றாறே என்று ஒரு கணக்கீடும் உண்டு,
- ஏழாங்காண்டமாக உத்தர காண்டம் என்னும் பகுதியைக் கம்பரின் சமகாலத்தவராகிய ஒட்டக்கூத்தர் இயற்றினார்,

## சிறு பஞ்சமூலம்

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- ஆசிரியர் காரியாசான்
- 97 வெண்பாக்கள் உள்ளன.
- கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன் நோயைத்தீர்ப்பன, அதுபோல் பாடலில் உள்ள 5 கருத்துகளும் மன நோயைப்போக்குவன

## பாஞ்சாலி சபதம்

- வியாசரின் பாரத்த்தை தழுவி எழுதப்பட்ட நூல்
- 2 பாகங்கள்
- சூழ்ச்சிச்சருக்கம் , சூதாட்டச் சருக்கம், அடிமை சருக்கம் , துகிலுரிதல் சருக்கம் , சபதச் சருக்கம் என 5 சருக்கங்கள்
- 412 பாடல்கள்

## இரட்சணியயாத்திரிகம்

- பொருள் : இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் , ஆன்ம ஈடேற்றத்தை விரும்புவர்
- ஜான் பன்யன் எனும் ஆங்கில ஆசிரியர் பில்கிரிம்ஸ் புரோகிரஸ் எனும் நூலைத்தழுவி ஹென்றி ஆல்பர்ட்டு கிருட்டினனார் வழி நூலாக தமிழில் இரட்சணீய யாத்திரிகம் எனும் பெயரில் இயற்றினார்

## மணிமேகலை

- ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்று
- மணிமேகலைத்துறவு என்பது வேறு பெயர்
- 30 காதைகள்
- பௌத்த மதம் சார்புடையது
- சிலப்பதிகாரமும் , மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்

## பரணி

- ஆயிரக் கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்கு பரணி
- 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று

சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- பரணி இலக்கியத்தில் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப் பரணி
- கலிங்க மன்னன் அனந்தபன்மன் மீது முதல் குலோத்துங்க சோழன் போர் தொடுத்து வெற்றி பெற்றதை பாராட்டி எழுதப்பட்ட நூல்
- தெந்தமிழ் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்
- எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே – பேறறிஞர் அண்ணா
- பரணி இலக்கியங்கள்
- தக்கயாகப் பரணி
- வங்கத்துப் பரணி
- மோகவதைப்பரணி
- பாசவதைப்பரணி
- சீனத்துப் பரணி
- திராவிடத்துப் பரணி
- ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மான வனுக்கு வகுப்பது பரணி என்று இலக்கண விளக்கப் பாட்டியல்நூல் பரணியின் இலக்கணம் கூறும்,
- பரணி என்றநாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்
- நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்றும் தமிழ்த்தாத்தா உ,வே,சாமிநாத
- ஐயர் கூறுவர், தோற்றவர் பெயரில் பரணி நூல் வழங்கப்பெறும்,
- தமிழில் முதன் முதல் எழுந்த பரணி கங்கத்துப் பரணி, 509 தாழிசைகளைக்
- கொண்டது. இந்நூல், ஒட்டக் கூத்தர் கலிங்கத்துப்பரணியைத் தென்தமிழ் தெய்வப்பரணி என்று சிறப்பித்துள்ளார்,

### முத்தொள்ளாயிரம்

- மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் .
- முழுமையாக கிடைக்கப்பெறவில்லை
- புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக 108 வெண்பாக்களும் பழைய உரை நூல்களில் மேற்கோள்களாக 22 வெண்பாக்களும் கிடத்துள்ளன

### ஏலாதி

- பதினெண்கீழ்க்கணக்கு நூலகளுள் ஒன்று
- 81 வெண்பாக்கள்
- ஏலம் , இலவங்கம்,சிறு நாவற்பூ , சுக்கு , மிளகு , திப்பிலி ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்று பெயர்
- கற்போரின் அறியாமையை அகற்றும்

### சிலப்பதிகாரம்

- சிலம்பு + அதிகாரம்
- 3 காண்டங்கள் , புகார்க் காண்டம் (10 காதைகள்) , மதுரைக் காண்டம்(13 காதைகள்) , வஞ்சிக் காண்டம்( 7 காதைகள்)
- 30 காதைகள்
- உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
- முதற்காப்பியம்

ஆர்.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- முத்தமிழ் காப்பியம்
- குடிமக்கள் காப்பியம்
- ஒற்றுமைக் காப்பியம்
- நாடகக் காப்பியம்
- நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு என பாரதியாரால் போற்றப்பட்டது
- இசை நாடகமே சிலப்பதிகாரக் கதையின் உருவம்
- ஐம்பெருங்காப்பியத்தில் முதன்மையானது
- சீத்தலைச் சாத்தனார் கோவலன் கண்ணகியின் கதையைக் கேற இளங்கோவடிகள் இயறினார்
- அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் , உரை சால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் , ஊழ் வினை உருத்து வந்து ஊட்டும் என்பதை உணர்த்துகிறது சிலப்பதிகாரம்
- கண்ணகியின் காற்சிலம்பு காரணமாக வளர்ந்த கதையாதலினால் (சிலம்பு+அதிகாரம்) சிலப்பதிகாரம் என்று பெயர் சூட்டப்பட்டது,
- இது. தமிழின் முதல் காப்பிய நூலாகும்,
- இந்நூலுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் இருவர், ஒருவர் அரும்பதங்களுக்கு
- மட்டும் உரைவழங்கிய அரும்பத உரைகாரர், (நூல் முழுமைக்கும் அரும்பத உரை உண்டு,) மற்றொருவர் விளக்கமாக உரை எழுதிய அடியார்க்கு நல்லார், (இவர் உரை.நூல் முழுமைக்கும் கிடைக்கவில்லை,) இக்காலத்தே வாழ்ந்த ந,மு,வேங்கடசாமி நாட்டார் உரை. நூல்முழுமைக்கும் உள்ளது,
- "மணிமேகலை மேல் உரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும் என்று இந்நூல் நிறைவு பெறுவதனால் மணிமேகலையையும் சிலப்பதிகாரத்தையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர்,
- மணிமேகலையை இயற்றிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இளங்கோவடிகளை 'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது; அடிகள் நீரே அருளுக என்று வேண்டிக் கொள்ள. அடிகளும் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள் என்று முன்வந்து இக்காப்பியத்தை ஆக்கியளித்தார் என்பது பதிகத்தின் வாயிலாக அறியவருகிறது,
- பாரதியார் இந்நூலின் அருமை பெருமைகளை உணர்ந்து. "நெஞ்சையள்ளும் சிலம்பு. எனப் புகழ்ந்துள்ளார்,
- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. 'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேறும் சிலப்பதிகாரம். எனப் பாராட்டியுள்ளார்,

## தேவாரம்

- தே+ வாரம் – தெய்வத்தன்மையுள்ள இசைப்பாடல்கள்
- தே+ ஆரம் – தெய்வத்திற்கு சூடப்பட்ட மாலை

சைவத் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் ஆகும், அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தராலும். நான்கு. ஐந்து. ஆறு திருமுறைகள் திருநாவுக்கரசராலும் ஏழாந்திருமுறைசுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்டவை ஆகும்,

## சீறாப்புராணம்

- நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் கூறும் நூல்
- சீறா – வாழ்க்கை
- புராணம் – வரலாறு
- விலாதத்துக் காண்டம் , நுபுவ்வத்துக் காண்டம் , ஹிஜ்ரத்துக் காண்டம் என 3 பிரிவுகள்
- 5027 விருத்தப்பாக்கள்

ரா.சிவா 8015118094

**திருவாசகம்**

- சைவத்திருமுறைகள் 12 ல் எட்டாம் திருமுறையில் திருவாசகமும் திருக்கோவையும் உள்ளன
- 658 பாடல்கள்
- திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்
- ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்

**சிற்றிலக்கியங்கள்**

- பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும்,பெருங்காப்பியங்களின் உறுப்பாக அமைந்திருந்த தூது. குறம் முதலான பலவும் பிற்காலத்தே தனித்தனி இலக்கிய வகைகளாக உருப்பெற்றன, அவ்வகையில் உருவான இலக்கிய வகைகள் பிற்காலத்தில் சிற்றிலக்கியங்கள் என வழங்கலாயின,
- பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்கிக் கூறுகின்றன, பாட்டியல் நூல்களுள் வச்சணந்திமாலை குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நூலாகும்,
- வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்,
- கோவை. உலா. தூது. கலம்பகம். பிள்ளைத்தமிழ். குறவஞ்சி. அந்தாதி முதறியவை சிற்றிலக்கியங்களுள் சிறப்பானவைகளாகக் கருதப்பெறுகின்றன,
- இறைவன். மன்னன். மக்களுள் சிறந்தோர் முதலானோரின் சிறப்புகளைஎடுத்துக் கூறும் நோக்கிலேயே சிற்றிலக்கியங்கள் எழுதப்பெற்றுள்ளன,
- காலந்தோறும் தமிழ்த்தாய் புதுப்புது அணிகளைப் புனைந்து வந்திருக்கிறாள் என்பதற்குச் சான்றுகளாய்ச் சிற்றிலக்கியங்கள் திகழ்கின்றன,

**தமிழரசி குறவஞ்சி,**

- குறவஞ்சி என்பது 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் (பிரபந்தங்களுள்) ஒன்றாகும்,
- தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் சுவாமிமலையில் கோவில் கொண்டுள்ள முருகப்பெருமான் ஆவார், உலா வரும் அவரைக் கண்டு மையல் கொள்பவள் தமிழரசி என்னும் தலைவியாவாள், தமிழன்னையையே பாட்டுடைத் தலைவியாக்கிக் குறவஞ்சி படைத்துள்ளார், தமிழரசி தம்தோழியருடன் பந்து முதலியன விளையாடி மகிழ்ந்திருக்கும் வேளையில் முருகப்பெருமான் உலா வருகின்றார், அவரைக் கண்டு மையல் கொண்ட தமிழரசி. திருமணத்திற்கு அவர் இசைவினைப் பெற்று வர. தூது அனுப்பிவிட்டு வருந்தியிருக்கின்றாள், அப்பொழுது
- வீதியில் குறி கூறிவரும் குறவஞ்சி ஒருத்தி தமிழரசியைக் கண்டு அவள் காதல்
- கைகூடுமென்று குறி கூறுகின்றாள், இவ்வாறு அமைந்துள்ளது தமிழரசி குறவஞ்சி,

**நீலகேசி**

- சீவக சிந்தாமணிக்கு நிகராகக் கவிதைச் சுவைமிக்க இந்நூலை எழுதியவர் இன்னாரென அறியக்கூடவில்லை,
- இந்நூல் நீலகேசித் தெருட்டு என்றும் அழைக்கப்படுகிறது,
- அருகசமயப் பெண்துறவியாகிய நீலகேசி யென்பாள் அருகன் திருக்கோயிலையடைந்து அருகதேவனின் ஆயிரத்தெட்டுத் திருப்பெயர்களால் பாடிப்பரவினாள்,

சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

**உலா**

- உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று, பாட்டுடைத் தலைவன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடுதலின் இப்பெயர் பெற்றது,
- உலா என்பதற்குப் பவனிவரல் என்பது பொருள்,
- தலைவன் வீதியில் உலாவர. அவனைப் பேதை. பெதும்பை. மங்கை. மடந்தை. அரிவை. தெரிவை. பேரிளம்பெண் என்னும் ஏழுவகைப் பருவ மகளிரும் கண்டு காதல் கொள்வதைக் கூறுவது உலா என்னும் சிற்றிலக்கியம் ஆகும்,
- இது க–வெண்பாவால் இயற்றப்படும்,
- இவ்விலக்கியம் உலாப்புறம் எனவும் வழங்கப்படும்,
- பாட்டுடைத்தலைவன் சிறப்பு. நீராடல். ஒப்பனை செய்தல். பரிவாரங்கள் புடை சூழத் தன் ஊர்தியில் ஏறி உலா வரல் ஆகியவற்றை உலாவின் முன்னிலை எனவும் உலாவரும் தலைவனைக் கண்டு காதல் கொண்ட ஏழு பருவ மகளிர் தனித்தனியாகக் கூறுவன உலாவின் பின்னிலை எனவும் கூறுவர்,
- ஏழு பருவப் பெண்களின் வயது முறையைப் பின் வருமாறு கூறுவர், பேதை 5–7. பெதும்பை 8–11. மங்கை 12–13. மடந்தை 14–19. அரிவை 20–25. தெரிவை 26–32 பேரிளம் பெண் 33–40.

**மதுரைக் கலம்பகம்**

- பலவகை வண்ணமும் மணமும் நிறைந்த மலர்களைத் தொடுத்துக் கட்டிய மாலையைக் கதம்பம் என்பர், அதுபோலப் பலவகை உறுப்பும் பலவகைப் பாவும் பாவினங்களும் பலவகைப் பொருளும் கலந்து செய்யப்பெறும் சிற்றிலக்கிய வகையைக் கலம்பகம் என்ற பெயரால் வழங்கினர்,
- கதம்பம் என்பது கலம்பகம் என்று திரிந்ததாகக் கருதுவர் டாக்டர் உ,வே,சா,
- கலம் – பன்னிரண்டு. பகம் – அதில் பாதி(ஆறு); பதினெட்டு உறுப்புகள் உடையதாகப் பாடப்படுவது, கலம்பகம்,
- புயவகுப்பு , அம்மானை,கார்,ஊசல், இரங்கல் , மறம் , தழை , தவம் , சித்து பாண் , கைக்கிளை , தூது , வண்டு , குறம் காலம் , மாதங்கி , களி , சம்பிரதம் எனும் 18 உறுப்புகளைக் கொண்டது
- தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் நந்திக் கலம்பகம் என்பர்,
- பல்லவ மன்னர் மூன்றாம் நந்திவர்மனை பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு எழுதப்பபட்டது நந்திக் கலம்பகம்

- மதுரைக் கலம்பகம் மதுரை மாநகரிற் கோவில் கொண்டுள்ள அருள்மிகு அங்கயற்கண்ணி உடனாய சொக்கநாதப் பெருமானைப் பட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட நூல், இந்நூலைப் பாடியவர் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரர் ஆவார்,
- பிறந்தது முதல் ஐந்தாண்டு வரை பேசாத குழந்தையாய் இருந்து பின்னர் திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால் பேசுந்திறன் பெற்றவர் குமரகுருபரர்,
- அவர் இயற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ். பிள்ளைத் தமிழ் இலக்கிய வகையில் மிகச் சிறந்த ஒன்று என்பர்,
- கந்தர் கலி வெண்பா. காசிக் கலம்பகம். முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ். சகலகலாவல்லி மாலை. நீதிநெறி விளக்கம் முதலியன இவர் இயற்றிய வேறு சில நூல்கள் ஆகும்

**அந்தாதி**

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று அந்தாதியாகும், அந்தம் என்ற சொல்லுக்கு இறுதி என்றும் ஆதி என்ற சொல்லுக்கு முதல் என்னும் பொருள், ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ. அசையோ. சீரோ. அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும், இதனைச் சொற்றொடர்நிலை என்று வழங்குவதும் உண்டு,



சிவா 8015118094

www.Padasalai.Net



**திருவேங்கடத்தந்தாதி**

திருவேங்கடத்தில் கோயில் கொண்டிருக்கும் திருமாலின் அருளை வேண்டிப் பாடப்பெற்ற அந்தாதி நூல், ஆதலால் இதனைத் திருவேங்கடத்து அந்தாதி என்று கூறுவர், இந்நூலைப்பாடியவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஆவார், 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய இவர் அழகிய மணவாளதாசர் எனவும் அழைக்கப்பட்டார், தெய்வக்கவிஞர் என்று பொருள்படும் 'திவ்வியகவி என்ற பெயராலும் இவரை அழைத்தனர், இவர் இயற்றிய எட்டு நூல்களின் தொகுதியை அஷ்டபிரபந்தம் எனக் கூறுவர், "அஷ்டபிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன் என்னும் பழமொழி இந்நூல்களின் உயர்வைப் புலப்படுத்தும், இவர்தம் பாடல்கள் சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடை நோக்கும் நடைநோக்கும் கொண்டு ஒளிர்கின்றன, கி,பி, 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அவையில் ஓர் அலுவலராய் அமர்ந்து வாழ்க்கை நடத்தி வந்த இவர் பின்னர் இறைத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்

**மனோன்மணீயம்**

நாடகத்தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினையுடையதாக விளங்குவது மனோன்மணீயம், நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது, இந்நாடகம் லிட்டன் பிரபு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி என்றநூலைத் தழுவி அமைந்தது, எனினும் இது வழிநூல் என்னாது முதல் நூல் எனவே கொள்ளப்பெறும் சீர்மையுடையது, பெருங்காப்பிய நூல்களுக்குரிய இயற்கை வண்ணனை. கற்பனையெழில். தத்துவச் செறிவு. உலகியல் உண்மை முதலிய கருத்துகள் அமைய எழுதப் பெற்றிருப்பினும் செய்யுள் நடையில் மிடுக்குடனும் நாடகத்தன்மைக்கேற்ற உரையாடற் சிறப்புகளுடனும் இந்நூல் தன்னிகரற்று விளங்குகிறது, அங்கங்களையும் காட்சிகளையும் அமைத்து எழுதுவது நாடக நன்னூல் மரபு, இந்நாடகம் ஐந்து அங்கங்களையும் இருபது காட்சிகளையும் கொண்டு விளங்குகிறது, இடையே சிவகாமி சரிதம் என்னும் துணைக் கதை ஒன்றும் இடம் பெற்றுள்ளது

**திருவிளையாடற்புராணம்**

- மதுரைக்காண்டம் ( 18 படலம்) , கூடற்காண்டம்( 30 படலம்) , திருவாலவாய்க்காண்டம் ( 16 படலம்) எனும் 3 பகுதிகளையும் 64 உட்பிரிவுகளையும் உடையது . 3363 விருத்தப்பாக்கள் உள்ளன . 64 திருவிளையாடல்கள்
- உரை எழுதியவர் : ந.மு.வேங்கடசாமி

**திருப்பாவை**

- பக்திக் காலத்தில் எழுதப்பெற்றஉயரிய பக்தி இலக்கியமாகும்,
- திருப்பாவையை வேதம் அனைத்திற்கும் வித்து என்று புகழ்வர், நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் மூன்றாவது பிரபந்தமாக வைக்கப்பட்டிருப்பது திருப்பாவை,
- பாவை என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று, பாவை என்றசொல் பொம்மை போன்ற படிமத்தைக் குறித்தது,பின் பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்புக்கு ஆகி. பின்னர் அந்நோன்பைத் தெரிவிக்கும் சிற்றிலக்கியத்துக்காகியது, அதனால் பாவை. இருமடியாகுபெயர், திருப்பாவைப் பாக்கள் முப்பது வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் கொச்சகக் கப்பா வகையைச் சார்ந்தவை

சிவா 8015118094

www.Padasalai.Net



**பெரிய புராணம்**

- தனியடியார் 63 , தொகைஉடியார் 9 ஆக 73 பேர் சிவனடியார்கள் .
- சிவனடியார்களின் வரலாற்றைக் கூறும் பெருமை பெற்ற புராணம்
- சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம்.
- தில்லை நடராசப் பெருமான் உலகெலாம் என அடியெடுத்துக்கூற பாடியவர்
- பக்திச் சுவை நனி சொட்ட சொட்ட பாடிய கவி வலவ என மீனாட்சி சுந்தரனார் சேக்கிழாரைப் பாராட்டியுள்ளார்
- உலகம் , உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரிய புராணம் என்பார் திரு.வி.க

**தூது**

- 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று
- கலி வெண்பாவில் உயர் திணைப்பொருளையோ அஃறிணைப் பொருளையோ தூது அனுப்புவதாகப் பாடுவது தூது
- மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்க நாதர் மேல் காதல் கொண்ட பெண் தமிழ் மொழியைத் தூது விடுவது தமிழ் விடு தூது

**திருவருட்பா**

- திரு + அருள் + பா = திருவருட்பா. இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல் என்றும், இறைவனின் திருவருளால் பாடிய பாடல் என்றும் இருவகையாகப் பொருள் கூறலாம். இஃது ஐயாயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டுப் பாடல் கொண்டது.

**மூதுரை**

- மூதுரை = முதுமை + உரை
- மூதுரை – சான்றோர்களது அறிவுரை
- மூதுரையின் இன்னொரு பெயர் வாக்குண்டாம்

**நறுந்தொகை**

- கொற்கை ஆண்ட அதிவீரராம பாண்டியனால் இயற்றப்பட்ட்து
- 82 பாடல்கள்
- வெற்றி வேற்கை என்பது இன்னொரு பெயர்
- நீதி நூல்

**நீதி நெறி விளக்கம்** – குமர குருபரர்

**இனியவை நாற்பது**

- எழுதியவர் பூதஞ்சேந்தனார் ( மதுரை தமிழ் ஆசிரியர்)
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- மொத்தம் 40 பாடல்கள்
- பாடல்கள் ஒவ்வொன்றும் 3 அல்லது 4 நற்கருத்துகளை இனிமையாகக் கூறுவன

சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

## இன்னிலை

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
- ஆசிரியர் : பொய்கையார்( பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்)
- தொகுத்தவர் : மதுரை ஆசிரியர்
- கடவுள் வாழ்த்து பாடியவர் : பாரதம் பாடிய பெருந்தேவனார்
- அறம் , பொருள் , இன்பம் ,வீடு எனும் நான்கையும் கூறுகிறது
- இனிமை + நிலை = இன்னிலை

- அறத்துப்பால் 10
- பொருட்பால் 09
- இன்பத்துப்பால் 12
- வீட்டுப்பால் 14 ( இல்லியல் 8 துறவியல் 6 )

## திருவள்ளுவமாலை

- திருக்குறளின் சிறப்பை உணர்த்த திருவள்ளுவ மாலை இயற்றப்பட்டது . இதில் 55 பாடல்கள் உள்ளன . 53 புலவர்கள் பாடியுள்ளனர்

## • நூல் ஆசிரியர்கள் ( 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை )

## திரு.வி.க

- திரு.வி.க – திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாண சுந்தரனார்.
- பெற்றோர் : விருத்தாசலனார் – சின்னம்மையார்
- பிறந்த ஊர் : துள்ளம்( காஞ்சிபுரம் ) தற்போதைய பெயர் தண்டலம். சென்னையை அடுத்த போரூருக்கு மேற்கே உள்ளது
- சிறப்புப் பெயர் : தமிழ்தென்றல்
- நூல்கள் : மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் , பெண்ணின் பெருமை தமிழ்த்தென்றல் உரிமை வேட்கை முருகன் அல்லது அழகு பொதுமை வேட்டல்
- பணி : சென்னை ராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியர் பணி
- பொதுமை வேட்டல் தலைப்பில் உள்ள பாக்களின் எண்ணிக்கை 430

## திருவள்ளுவர்

- நாயனார் , முதற்பாவலர் , நான்முகனார் , மாதானுபாங்கி , செந்நாப்போதார் , பெரு நாவலர் ,தேவர்,முதற்பாவலர்,பொய்யில் புலவர்,தெய்வப்புலவர்என்பன வேறுபெயர்கள்
- பிறந்த ஊர் மயிலாப்பூர் எனவும் மதுரை எனவும் கூறுவர்
- மனைவி : வாசுகி
- தந்தை பகவன்
- தாய் : ஆதி
- வாசுகி மார்க்க சகாயர் எனும் வேளாளரின் மகள்
- பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் பொது நெறி காட்டியவர்

இரா.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- தை திங்கள் 2 ஆம் நாள் திருவள்ளுவர் நாள்
- வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு – பாரதியார்
- வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே – பாரதிதாசன்
- திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால் தமிழன் என்னும் இனம் இருப்பதாக உலகத்தாருக்கு தெரிந்திருக்காது . திருக்குறள் என்னும் நூல் தோன்றியிராவிட்டால் தமிழ் மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தாருக்கு தெரிந்து இருக்காது --- கி.ஆ.பெ.விசுவ நாதம்

### குமரகுருபரர்

- பெற்றோர் : சண்முகசிகாமணிக் கவிராயர்
- சிவகாம சுந்தரியம்மை
- ஊர் : திருவைகுண்டம்
- இயற்றிய நூல்கள் : கந்தர் கலிவெண்பா,
  மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்,
  மதுரைக் கலம்பகம்,
  சகலகலாவல்லி மாலை,
  திருவாரூர் மும்மணிக்கோவை,
  நீதிநெறி விளக்கம் முதலியன.
- சிறப்பு : தமிழ், வடமொழி, இந்துத்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். திருப்பனந்தாளிலும் காசியிலும் தம்பெயரால் மடம் நிறுவி உள்ளார்.
- இறப்பு : காசியில் இறைவனது திருவடியடைந்தார்.
- காலம் : பதினேழாம் நூற்றாண்டு.

### வாணிதாசன்

- இயற்பெயர் : எத்திராசலு ( எ ) அரங்கசாமி
- பெயர் : வாணிதாசன்
- பிறந்த இடம் : புதுவையை அடுத்த வில்லியனூர்
- பெற்றோர் : அரங்க. திருக்காமு – துளசியம்மாள்
- 'கவிஞரேறு', 'பாவலர்மணி' என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார்.
- தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்' என இவரைத் தமிழுலகம் புகழ்கிறது.
- உருசியம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர்தம் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- காலம் : 22.07.1915 – 07.08.1974
- 'பாரதிதாசன் பரம்பரை என்றழைக்கப்படும் பாவலர் தலைமுறையில் வருபவர் கவிஞரேறு வாணிதாசன்,
- இவர். பாவேந்தர் பாரதிதாசனிடம் தொடக்கக் கல்வி பயின்றவர், அத்தொடக்கக் கல்வியே பாப்புனையும் தமிழுணர்விற்கும் தொடக்கமாயிற்று,
- இவர்தம் பாடல்கள். சாகித்திய அகாதெமி வெளியிட்ட 'தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்ற நூலிலும் தென்மொழிகள் புத்தக வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட 'புதுத்தமிழ்க் கவிமலர்கள் என்ற நூலிலும் மற்றும் பற்பல தொகுப்பு நூல்களிலும் இடம் பெற்றுள்ளன,
- இவர் பிரெஞ்சுமொழியிலும் புலமை பெற்றவர், 'தமிழ் – பிரெஞ்சு கையகர முதலி என்ற நூலை வெளியிட்டுள்ளார்,
- பிரெஞ்சுக் குடியரசுத்தலைவர் இவருக்கு 'செவாலியர் என்ற விருதினை வழங்கி உள்ளார், மேலும் 'கவிஞரேறு. பாவலர் மணி முதலிய பட்டங்களும் வாணிதாசனுக்கு வழங்கப்பட்டுள்ளன,

இரா.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

### காளமேகப் புலவர்

- பிறந்த ஊர் : கும்பகோணம் ( நந்தி கிராமம் ) எனவும் விழுப்புரம் ( எண்ணாயிரம்)
- இயற்பெயர் : வரதன்
- பணி : திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணி .
- கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றவர்.இரு பொருள் பட நகைச்சுவையாகப் பாடுவார்.

### மருதகாசி

- பெயர் : அ. மருதகாசி
- பிறந்த ஊர் : திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு
- பெற்றோர் : அய்ய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள்.
- சிறப்பு : திரைக்கவித் திலகம்
- காலம் : 13.02.1920 – 29.11.1989

### ஈசான தேசிகர்

- திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆவார்.
- ஈசான தேசிகர் என்பது, அவரது சிறப்புப் பெயராகும்.
- தாண்டவமூர்த்தி என்பார்க்கு மகனாகப் பிறந்தார்.
- இவர் மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றார்.
- இவர், திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்குத் தொண்டராய்் இருந்தார்;
- ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

### ந. வேங்கட மகாலிங்கம்

- இயற்பெயர் : ந. வேங்கட மகாலிங்கம்
- புனைபெயர் : ந. பிச்சமூர்த்தி
- ஊர் : தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம்
- தொழில் : 1924 – 1938வரை வழக்குரைஞர்.
- 1938 – 1954வரை கோவில் நிருவாக அலுவலர்.
- எழுத்துப்பணி : கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள்.
- காலம் : 15.08.1900 – 04.12.1976

### கம்பர்

- இயற்பெயர் : கம்பர்
- தந்தையார் : ஆதித்தன்
- பிறந்த ஊர் : தேரழுந்தூர், மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ளது.
- ஆதரித்தவர் : சடையப்ப வள்ளல்
- இயற்றிய நூல்கள் : கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்.
- சிறப்பு : கல்வியில் பெரியர் கம்பர், கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், கவிச்சக்கரவர்த்தி, விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் . யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் என பாரதியார் பாராட்டியுள்ளார்

சிவா 8015118094

- காலம் : பன்னிரண்டாம் நூற்றாண்டு. இரண்டாம் குலோத்துங்கன் வாழ்ந்த காலம். சயங்க்கோண்டார் , ஒட்டக்கூத்தர் , புகழேந்தி ஆகியோர் இவர் காலத்தவர்

**என்னயினாப் புலவர்**

- முக்கூடற்பள்ளு நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.
- நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர்.
- சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.

**பாரதிதாசன்**

- இயற்பெயர் : சுப்புரத்தினம்.
- பாரதியார்மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் எனத் தன் பெயரை மாற்றி அமைத்துக்கொண்டார்.
- பெற்றோர் : கனகசபை – இலக்குமியம்மாள்
- கல்வி : த மி ழ் , பி ெ ரஞ்சு , ஆங் கி ல ம் ஆகி ய வ ற் றி ல் புலமை மிக்கவர்.
- இயற்றியவை : குடும்ப விளக்கு , ப ாண்டியன் பரிசு , சேர தாண்டவம், இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி , பிசிராந்ை தயார் , குறிஞ்சித்திட்டு , அழகின் சிரிப்பு, தமிழியக்கம் ,சஞ்சீவி பர்வதத்தின் சாரல் , இசையமுது முதலியன.
- காலம் : 29.04.1891 – 21.04.1964.
- தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர்.
- பாவேந்தர், புரட்சிக்கவி எனச் சிறப்புப் பெயர்களும் உண்டு.
- திரிச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் உள்ளது
- சிறந்த கவிஞர்களுக்கு தமிழக அரசால் பாவேந்தர் விருது வழங்கப்படுகிறது
- ‘தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாதமரம்; கூடில்லாத பறவை,,,,, என்று பாடிய உருசியக் கவிஞர் இரசூல் கம்சதோவ் போலவே பாவேந்தர் பாரதிதாசனும் விளங்குகிறார்,
- இவர் எழுதிய பிசிராந்தையார் நாடகம் சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றது,
- ‘வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே என்னும் பாடலைப் புதுவை அரசு தனது தமிழ் வாழ்த்துப் பாடலாக ஏற்றுக் கொண்டுள்ளது,
- தமிழக அரசு இவர் பெயரால் பல்கலைக்கழகமொன்று நிறுவியும். இவர்தம் நூல்களை நாட்டுடைமையாக்கியும் இவருக்குச் சிறப்புச் செய்துள்ளது,
- இவர் வெளியிட்ட ‘குயில் என்ற இலக்கிய இதழ் பல்வேறு கவிஞர்கள் தோன்றி வளரக் காரணமாயிருந்தது,
- ‘எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள் இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால் தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும், என்று பாண்டியன் பரிசு வாயிலாகச் சொல்லப்படும் கருத்து இக்கவிஞர் பெருமானின் வாழ்க்கைக் குறிக்கோள் என்றே கொள்ளலாம்,
- ‘தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துறைதோறுந் துடித்தெழுந்தே என்று தமிழர்களைத் தட்டியெழுப்பிய பாவேந்தர் 21–4–1964 அன்று இயற்கையெய்தினார்

தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லை. – பாரதிதாசன்

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

## திருத்தக்கதேவர்

- திருத்தக்கதேவர் சோழர் அரச குலத்தில் பிறந்தவர்.
- இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர்.
- இவரது காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு ஆகும்.
- இவர் பாடிய மற்றொரு நூல் நரி விருத்தம் ஆகும்.

## கவியரசு கண்ணதாசன்

- சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.
- இவரின் இயற்பெயர் முத்தையா.
- இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கிய நாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு.
- கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.
- தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார்.
- இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- சாத்தப்பன்–விசாலாட்சி என்பாருக்கு மகனாக 24–6–1927–ல் பிறந்தவர்.
- தென்றல். தென்றல்திரை. சண்டமாருதம். முல்லை. கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக விளங்கினார்,
- இவருடைய கவிதைகள் கண்ணதாசன் கவிதைகள் என்றபெயரில் பல தொகுப்புகளாக வெளி வந்துள்ளன,
- அர்த்தமுள்ள இந்துமதம் என்னும் கட்டுரைத் தொடர்களும். இயேசுகாவியம் என்னும் நூலும் இவர் புகழை என்றும் நிலைநிறுத்தும்,
- மத்திய மாநில அரசுகளின் விருதுகளையும். சாகித்திய அகாதெமிப் பரிசினையும் அண்ணாமலையரசர் நினைவுப் பரிசினையும் பெற்றவர்,
- 17–10–1981–இல் இயற்கை எய்தினார்,

## தேசிய விநாயகம் பிள்ளை

- ஊர் : தேரூர் ( கன்னியாகுமரி )
- பெற்றோர் : சிவதாணுப்பிள்ளை – ஆதி லட்சுமி
- சிறப்பு பெயர் : கவிமணி
- நூல்கள் : மலரும் மாலையும் , மருமக்கள் வழி மான்மியம் , உமர் கய்யாம் பாடல்கள் , குழந்தைச் செல்வம் ,ஆசிய ஜோதி
- காலம் : 27.07.1876 – 26.09.1954

## உமர் கய்யாம்

- பாரசீகக் கவிஞர்
- இயற்பெயர் கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம்
- கணிதம் ,வானவியல் ஆகியவற்றில் புலமை மிக்கவர்
- நூல் இம்மை மறுமை பற்றி ரூபாயத் செய்யுள்கள் ( 4 அடிச் செய்யுள்கள் ) . இதனை கவிமணி தமிழில் மொழி பெயர்த்துள்ளார்

## தணிகை உலக நாதன்

- ஊர் : திருவத்திபுரம் , வேலூர் மாவட்டம்
- பெற்றோர் : தணிகாசலம் , சுந்தரம் அம்மையார்



ஸ்ரீசிவா 8015118094

- நூல்கள் பூஞ்சோலை , தேன் சுவைக் கதைகள்,பாடும் பாப்பா , மாணவர் தமிழ் விருந்து , சிறுவர் நாடக விருந்து
- காலம் : 1.10.1921 – 19.11.1993
- விருது : 1974 ல் தமிழக அரசின் நல்லாசிரியர் விருது

### முன்றுறை அரையனார்.

- முன்றுறை என்பது ஊர்ப்பெயர்.அரையன் என்னும் சொல், அரசனைக் குறிக்கும். இவர் முன்றுறை என்ற ஊரை ஆண்டஅரசராக இருக்கலாம் அல்லது அரையன் என்பது புலவரின் குடிப்பெயராகவும் இருக்கலாம்.

### கடுவெளிச் சித்தர்.

- இவர், உருவ வழிபாடு செய்யாமல் வெட்டவெளியையே கடவுளாக வழிபட்டவர்;
- எளிய சொற்களில் அறிவுரைகளைக் கூறியவர்.
- ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்.
- பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் என்பன எல்லாமே காரணப் பெயர்கள்.

### தாராபாரதி

- கவிஞர் தாராபாரதி எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர். ஆசிரியராகப் பணியாற்றிய இவர், தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்.
- புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, தாராபாரதி கவிதைகள் முதலியன இவர்தம் நூல்களுள் சில.
- இவர் வாழ்ந்த காலம் 26.02.1947முதல் 13.05.2000வரை.
- கவிஞர் தாரா பாரதி திருவண்ணாமலை மாவட்டம் 'குவளை என்னும் சிற்றூரில் பிறந்தார்,
- பெற்றோர் திரு, துரைசாமி; புஷ்பம் அம்மாள்,.
- 'விரல்நுனி வெளிச்சங்கள். 'பூமியைத் திறக்கும் பொன்சாவி. 'இன்னொரு சிகரம்.
- முதலான கவிதை நூற்களைப் படைத்துள்ளார்,

### பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

- 'மக்கள் கவிஞர்' என அழைக்கப்படும் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்படி கவிதைகளை இயற்றியவர்;
- திரையிசைப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.
- உழைக்கும் மக்களின் துயரங்களையும் பொதுவுடைமைச் சிந்தனைகளையும் தம்முடைய பாடல்கள்வழிப் பரவலாக்கினார்.
- பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் ஊரில் பிறந்தவர்.
- இவர் வாழ்ந்த காலம் 13.04.1930முதல் 08.10. 1959 வரை.

### இராமச்சந்திரக்கவிராயர்

- புலவர் பலர், அவ்வப்போது பாடிய பல பாடல்கள் தொகுக்கப்படாமல் இருந்தன. அவற்றைத் 'தனிப்பாடல் திரட்டு' என்னும் பெயரில் தொகுத்துள்ளனர். பெரும்பாலான பாடல்கள் இருநூறுமுதல் முந்நூறு ஆண்டுகளுக்குள் பாடப்பட்டவை. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் பாடியவர் இராமச்சந்திரக்கவிராயர்; துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர் இவர்.

### உடுமலை நாராயணகவி

- உடுமலை நாராயணகவி தமிழ்த் திரைப்படப்பாடல் ஆசிரியரும் நாடக எழுத்தாளரும் ஆவார்.
- பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர். '

ஸ்ரீ சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- பகுத்தறிவுக் கவிராயர்' எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்.
- இவர் வாழ்ந்தகாலம் 25. 09. 1899முதல் 23. 05. 1981 வரை.

## தாயுமானவர்

- பெற்றோர் : கேடிலியப்பர் – கெசவல்லி
- மனைவி : மட்டுவார் குழலி
- ஊர் : திருமறைக்காடு, வேதாரண்யம் ( நாகப்பட்டினம்)
- நூல் : தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
- பணி : திருச்சியை ஆண்ட விஜய ரகு நாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலர்
- காலம் : கி.பி 18 ஆம் நூற்றாண்டு
- தாயுமானவர் நினைவு இல்லம் இராம நாதபுரம் மாவட்டத்து இலட்சுமி புரத்தில் உள்ளது
- திருச்சி மலை மீது எழுந்து அருளியுள்ள இறைவன் தாயுமானவர்
- இந்நூல் 1452 பாடல்களைக் கொண்டதாகும், இறைநெறியை வலியுறுத்தும் தாயுமானவர்பாடல்கள் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றப் படுகின்றது,
- தாயுமானவர் எல்லாரும் இன்புற்றிருக்க நினைத்தவர், அன்பர் பணி செய்ய ஆர்வங் கொண்டவர்,
- துறவு வாழ்க்கையில் நாட்டங்கொண்டு துறவு பூண்டார், திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பாரின் அருளும். ஆசியும் பெற்றுச் சிறந்து விளங்கினார், அவர் முக்தி பெற்ற இடம் இராமநாதபுரத்தின் ஒரு பகுதியிலுள்ள இலட்சுமிபுரமாகும்

## பூதஞ்சேதனார்

- இனியவை நாற்பதின் ஆசிரியர்
- ஊர் : மதுரை
- காலம் 2 ஆம் நூற்றாண்டு
- இனியவை நாற்பது – 40 பாடல்கள் – நன்மை தரும் கருத்துகளைக் கூறுகிறது . பதினெண்கீழ்க்கணக்கு நூலகளுல் ஒன்று

## புகழேந்திப்புலவர்

- ஊர் : பெருங்களத்தூர் ( காஞ்சிபுரம்) தொண்டை நாடு
- சிறப்பு : வரகுண பாண்டியனின் அவைப்புலவர்
- ஆதரித்த வள்ளல் : சந்திரன் சுவர்க்கி
- கம்பரும் , ஒட்டக்கூத்தரும் இவர் காலத்தவர்
- சிறப்பு பெயர் : வெண்பாவிற் புகழேந்தி

## இராமலிங்க அடிகளார்

- பெற்றோர் : இராமையா – சின்னம்மை
- ஊர் : சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர்
- சிறப்புப் பெயர் : திருவருட்பிரகாச வள்ளலார்.
- சிறப்பு : வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய
- ஞானசபை, சத்திய தருமச்சாலை ஆகியவற்றை நிறுவினார்.
- இயற்றிய நூல்கள் : திருவருட்பா, சீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறை கண்ட வாசகம் முதலியன.
- காலம் : 05. 10. 1823 முதல் 30. 01. 1874 வரை
- அனைத்து மதங்களின் நல்லிண்க்கத்திற்காக சன்மார்க்க சங்கத்தையும், பசித்துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க அறச் சாலையையும் , அறிவு நெறி விளங்க ஞானசபையையும் நிறுவியவர்.

சிவா 8015118094

- வாடிய பயிர் கண்டபோதெல்லாம் வாடிய மனம் உடையவர்

### நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கம்

- பெற்றோர் : வேங்கட ராமன் – அம்மணி அம்மாள்
- ஊர் : மோகனூர் – நாமக்கல் மாவட்டம்
- காலம் : 19.10.1988 – 24 .08.1972
- நூல்கள் ; என் கதை , சங்கொலி, அவனும் அவளும் , மலைக்கள்ளன் ,
- சிறப்பு : விடுதலைப்போராட்ட வீரர், தமிழ் நாடு அரசின் முதல் அரசவைக் கவிஞர், தமிழக அரசின் சட்ட மேலவை உறிப்பினர்
- காந்தியக் கவிஞர் எனப் போற்றப்பட்டார்
- நடுவண் அரசின் பதமபூஷன் விருது பெற்றவர்
- உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் வழிநடைப் பாடலாகப் பாடுவதற்குக் கவிஞர் இயற்றிய 'கத்தி யின்றி ரத்த மின்றி யுத்த மொன்று வருகுது சத்தி யத்தின் நித்தி யத்தை நம்பும் யாரும் சேருவீர் என்னும் பாடல் விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவராலும் உணர்ச்சியுடன் பாடப்பெற்ற புகழ்மிக்க பாடலாகும்,

### பாரதியார்

- பாட்டுக்கொரு புலவன் பாரதி
- சுதந்திரப் போராட்ட வீரர்
- 11.12.1882 முதல் 11.09.1921 வரை
- மகாகவி
- எட்டயபுரத்தில் பிறந்தவர் ( தூத்துக்குடி )
- பெற்றோர் : சின்னசாமி – இலக்குமி
- துணைவியார் : செல்லம்மாள்
- படைப்பு : கண்ணன் பாட்டு , குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் , ஞானரதம் , சந்திரிகையின் கதை , தராசு
- சிறப்பு : பாட்டுக்கொரு புலவன் , நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா , தற்கால இலக்கியத்தின் விடிவெள்ளி , தேசியக்கவி , மகாகவி
- பணி : சுதேசமித்திரன் ,சக்கரவர்த்தினி, இந்தியா இதழின் ஆசிரியர்
- 'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல் என்னும் கொள்கை முழக்கமிட்ட மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்,
- இளமைப் பெயர் சுப்பிரமணியன்,
- இளமையிலேயே பாப்புனையும் ஆற்றல் பெற்றிருந்தமையால். கலைமகள் என்னும் பொருள் தரும் பாரதி என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்,
- தமிழ் நாட்டில் தமிழ்ப்புலவன் ஒருவன் இல்லையெனும் வசை நீங்க வந்து தோன்றியவர் பாரதியார், அவர். பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திடச் செய்தவர், பண்டிதர்களின் கரடுமுரடான நடையில் தேங்கிக் கிடந்த தமிழைப் பலரும் படித்தறியும் வகையில். எளிய. இனிய பாக்களாக வடித்து உலவவிட்டவர் பாரதியார்,
- இவர் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் எனவும் 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனவும் தமிழ்மொழி பரவிட விழைந்த தமிழ்ப் பாவலர் ஆவார்,
- ஆன்மீக விடுதலை. பெண்விடுதலை. சமுதாய விடுதலை. முதலான விடுதலைகளை உள்ளடக்கிய நாட்டுவிடுதலையை விழைந்த விடுதலைக் கவிஞர் ஆவார்,
- இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இவர்,

இரா சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- தமிழ். ஆங்கிலம். சமக்கிருதம். இந்தி. வங்காளம். பிரெஞ்சு அரபு முதலான பலமொழிகளில் புலமை பெற்றிருந்த இந்த மாக்கவி "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம் எனப் பாடித் தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்தவர், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்தொழுது படித்திடடி பாப்பா எனப் பாப்பாவுக்குக் கூறுவதுபோல் பலருக்கும் கூறித் தமிழ்ப்பற்றை வளர்த்த மாபெருங் கவிஞராவார்,
- தேசியகவி பாரதியார் மதுரையில் உள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகவும் இருந்தார்.
- கீதையை மொழிபெயர்த்துள்ளார்

**திருமூலர்**

- பெயர் : மூலன் என்னும் பெயர், திரு என்னும் பெயரடை பெற்று, அதனுடன் அர் என்னும் மரியாதைப் பன்மையும் பெற்றுத் திருமூலர் என ஆயிற்று.
- காலம் : ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதி.
- சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறை திருமந்திரம்.
- இதற்குத் தமிழ் மூவாயிரம் என்னும் வேறுபெயரும் உண்டு.
- இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது இந்நூலின் புகழ்மிக்க தொடராகும்.

**வீரமாமுனிவர்**

- பெயர் : வீரமாமுனிவர்
- இயற்பெயர் : கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
- பெற்றோர் : கொண்டல் போபெஸ்கி – எலிசபெத்
- பிறந்தநாடு : இத்தாலி
- அறிந்தமொழிகள் : இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம்
- சிறப்பு : முப்பதாம் வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை
- இயற்றிய நூல்கள் : ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம், கித்தேரியம்மாள் அம்மானை.
- காலம் : 08. 11. 1680முதல் 04. 02. 1747வரை.
- கொன்ஸ்டான் என்னும் இத்தாலி மொழிச் சொல்லுக்கு அஞ்சாமை என்பது பொருள்,
- இவர் தம் பெயரைத் தைரியநாதசாமி என்று மாற்றிக் கொண்டார், தமிழ்ச்சான்றோர் இவரை வீரமாமுனிவர் என்று அழைத்தனர்,
- 1710 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வந்த இப்பெரியார் முப்பத்தேழாண்டுகள் சமயப் பணியுந் தமிழ்ப் பணியும் புரிந்து 1747 ஆம் ஆண்டில் அம்பலக்காடு என்னும் இடத்தில் இயற்கையெய்தினார்,
- வீரமாமுனிவரின் தமிழ்ப்பணிகள் என்றும் நினைக்கற்பாலன,
- சிற்றிலக்கியங்கள். உரைநடை. அகராதி. மொழி பெயர்ப்பு. இலக்கணம். பெருங்காப்பியம் என்று தமிழிலக்கிய வரலாற்றில் அவரது பங்களிப்பு நிலைபேறுடையதாக விளங்குகிறது,
- இவர் திருக்காவலூர்க் கலம்பகம். கித்தேரியம்மாள் அம்மானை. வேதியர் ஒழுக்கம். பரமார்த்த குருகதை. செந்தமிழ் இலக்கணம். கொடுந்தமிழ் இலக்கணம். தொன்னூல் விளக்கம். சதுரகராதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்,
- திருக்குறளின் அறத்துப்பால் பொருட்பால் இரண்டனையும் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்,

**வில்லிபுத்தூரார்**

- தந்தையார் : வீரராகவர்
- ஆதரித்தவர் : வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான்

சிவா 8015118094

- காலம் : பதினான்காம் நூற்றாண்டு
- நூல் குறிப்பு : வில்லிபாரதம் பத்துப் பருவம் கொண்டது. நாலாயிரத்து முந்நூற்றைம்பது விருத்தப் பாடலால் ஆனது.

**முடியரசன்**

- இயற்பெயர் : துரைராசு
- பெற்றோர் : சுப்பராயலு – சீதாலட்சுமி
- ஊர் : தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம்.
- இயற்றிய நூல்கள் : பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம்,
- முடியரசன் கவிதைகள் முதலியன.
- பணி : தமிழாசிரியர், மீ.சு. உயர்நிலைப் பள்ளி,
- காரைக்குடி.
- பட்டம் : பறம்புமலையில் நடந்த விழாவில் கவியரசு என்னும் பட்டம் குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பெற்றது.
- பரிசு : பூங்கொடி என்னும் காவியத்துக்காக 1966இல் தமிழக அரசு, பரிசு வழங்கியது.
- சிறப்பு : முடியரசன், பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்த த வ ர் .
- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.
- காலம் : 07. 10. 1920முதல் 03. 12. 1998வரை
- சாதி மறுப்புத் திருமணஞ் செய்து கொண்டவர், சடங்குகளை மறுப்பவர், தமது மறைவின் பொழுதும் எச்சடங்குகளும் வேண்டா என்றேஉரைத்து. அவ்வாறேநிறைவேறச் செய்தவர்,
- பூங்கொடி. காவியப்பாவை. வீரகாவியம் என்னுங் காப்பியங்களையும் முடியரசன் கவிதைகள் என்றகவிதை நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார், இவரது கவிதைகளைச் சாகித்திய அகாதெமி இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது,

**ஔவையார்**

- ஔவையார் சங்கப் புலவர்;
- அதியமானின் நண்பர்.
- அரிய நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர்.
- சங்க காலத்தில் பெண் கவிஞர் பலர் இருந்தனர். அவர்களுள் மிகுதியான பாடல்கள் பாடியவர் ஔவையார். சங்கப்பாடல் பாடிய ஔவையாரும், ஆத்திசூடி பாடிய ஔவையாரும் ஒருவர் அல்லர்; வேறு வேறானவர்.

**அசலாம்பிகை அம்மையார்**

- பிறந்த ஊர் : திண்டிவனத்திற்கு அருகில் உள்ள இ ரட்டணை.
- இயற்றிய நூல்கள் : ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம்.
- சிறப்பு : அசலாம்பிகை அம்மையார் சிறந்த பேச்சாளர்.
- இவரை இக்கால ஔவையார் என்று திரு.வி.க. பாராட்டுவார்.
- இவர் பலகாலம் திருப்பாதிரிப் புலியூரில் (கடலூர்) வாழ்ந்தார். இறுதிக்காலத்தில் சில ஆண்டுகள் வடலூரில் வாழ்ந்தார்.
- அப்போது, நானூற்று ஒன்பது பாடல்களைக்கொண்ட இராமலிங் கசுவாமிகள் சரிதம் என்னும் செய்யுள் நூலை இயற்றினார்.

**மோசிகீரனார்** .

- மோசி எனும் ஊரில் வாழ்ந்தவர் . கீரன் என்பது குடிப் பெயர் . உடல் சோர்வால் முரசு கட்டிலில் படுத்துறங்கிய போது சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை மன்னரால் கவரி வீசப் பெற்ற பெருமை உடையவர்

இரா.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- **பரஞ்சோதி முனிவர்**
- திருவிளையாடல் புராணம் எழுதியவர்
- தந்தை : மீனாட்சி சுந்தர தேசிகர்
- நாகை மாவட்டம் திருமறைக்காட்டில் வேதாரண்யம் பிறந்தவர்
- எம்பெருமான் திருவிளையாடலைப் பாடுக என்று மதுரை மீனாட்சி அம்மை கனவில் தோன்றி கூறியதால் இவர் திருவிளையாடல் புராணத்தை இயற்றினார்
- பிற நூல்கள் : வேதாராண்ய புராணம் , திருவிளையாடற் போற்றி கலி வெண்பா , மதுரை பதிற்றுப் பத்தந்தாதி
- காலம் 16 ஆம் நூற்றாண்டு
- மதுரை சோம நாதக் கடவுள் நிகழ்த்திய 64 திருவிளையாடலைக் குறிக்கும்
- ம்துரைக் காண்டம் , கூடற்காண்டம் , திருஆலவாய்க் காண்டம் எனும் 3 பிரிவுகளைக் கொண்டது.
- புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடல் புராணத்தை வடமொழி ஆலாசிய மகாத்துமியம் எனும் நூலையும் தழுவி இயற்றப்பட்டது

- **திரிகூட ராசப்பக் கவிராயர்**
- திருக்குற்றாலக் குறவ ஞ்சி எனும் நூலை இயற்றியவர்
- ஊர் : மேலகரம் ( திரு நெல்வேலி)
- மதுரையை ஆண்ட முத்து விஜய ரங்க சொக்க நாத நாயக்கர் அவர்களால் மற்றும் சொக்கம்பட்டி சின்ன ஞ்சாத் தேவர் அவர்களாலும் பாராட்டப் பெற்றான்
- நூல்கள் : குறவ ஞ்சி நாடகம் , தல புராணம் , அந்தாதி , மாலை உலா பிள்ளைத்தமிழ்
- குற வ ஞ்சி 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று
- குறம் – மலை வாழ் மக்களின் வாழ்க்கை
- குற வ ஞ்சி நாடகம் என்பது மற்றொரு பெயர்
- குறத்தி தன் நாட்டு வளத்தைப் பாடுவது

- **இரட்டைப் புலவர்கள்**
- இள ஞ் சூரியன் , முது சூரியன் என்பவர்களே இரட்டைப் புலவர்கள்
- ஊர் : ஆமிலந்துறை
- ஒருவர் பார்வை இழந்தவர் , இன்னொருவர் நடக்க இயலாதவர்
- கால் ஊனமுற்றவரை பார்வை இழந்தவர் தூக்கிச் செல்வார்
- முதல் 2 அடிகளை ஒருவர் பாட அடுத்த 2 அடிகளை வேறொருவர் பாடுவார்
- நூல் : தில்லைக் கலம்பகம்

**வீரராகவர்**

- பிறந்த ஊர் : பூதூர் ( கா ஞ்சிபுரம் )
- வளர்ந்தது :களத்தூர்
- கண்ணொளி இழந்தவர்
- நூல் திருக்கழுக்குன்றப் புராணம் , திருக்கழுக்குன்ற மாலை , சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் , திருவாரூர் உலா , சந்திரவாணன் கோவை
- தனிப்பாடல்கள் ( வள்ளல்கள் , சிற்றரசர்கள் பற்றி )
- இலங்கை மன்னர் பரராசசேகரைப் புகழ்ந்து பாடல்கள்

இரா.சிவா 8015118094

**சயங்கொண்டார்**

- ஊர் : தீபங்குடி திருவாரூர் மாவட்டம்
- முதல் குலோத்துங்க சோழனின் அரசவைப் புலவர்
- நூல்கள் இசையாயிரம் , உரை மடல்
- காலம் : 12 ஆம் நூர்ற்றாண்டு
- பரணிக்கோர் சயங்கொண்டார் என சொக்க நாதப்புலவர் பாராட்டியுள்ளார்

**சீத்தலைச் சாத்தனார்**

- இயற்பெயர் : சாத்தான்
- ஊர் : சீத்தலை ( திருச்சி)
- வாழ்ந்த ஊர் : மதுரை
- பணி : கூல வாணிகம் ( கூலம் – தானியம்)
- கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்
- தண்டமிழ் ஆசான் , சாத்தான் நன்னூற்புலவன் என இள்ங்கோவால் பாராட்டப்பட்டவர்
- காலம் : 2 ஆம் நூற்றாண்டு

**உவமைக்கவிஞர் சுரதா**

- இயற்பெயர் : இராசகோபாலன்
- ஊர் : திருச்சி ( பழையனூர்)
- பெற்றோர் : திருவேங்கடம் , செண்பகம்
- பாரதிதாசன் மீது கொண்ட பற்றினால் சுப்புரத்தினதாசன் ( சுரதா) என மாற்றிக் கொண்டார்
- நூல்கள் தேன்மழை ( சிறந்த நூலுக்கான பரிசு – தமிழ் வளர்ச்சித்துறை) , துறைமுகம் , சுவரும் சுண்ணாம்பும் , சுரதாவின் கவிதகள்
- தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலை மாமணிப் பட்டடம் , தமிழக அரசின் பாவேந்தர் விருதும் பெற்றவர்

**எச்.ஏ கிருட்டினார்**

- இரட்சணிய யாத்திரிக நூலின் ஆசிரியர்
- பிறந்த இடம் : கரையிருப்பு ( திரு நெல்வேலி ) 23 ஏப்ரல் 1827
- பெற்றோர் : சங்கர நாராயணன் , தெய்வ நாயகி
- மாணிக்க வாசகத்தேவரிடம் இலக்கணங்களையும் , பிலவணச் சோதிடரிடம் வடமொழியையும் கற்றவர்
- நூல்கள் இரட்சணிய சமய நிர்ணயம் , இரட்சணிய மனோகரம் , இரட்சணியக் குறள் , போற்றித்திருவகல்
- சிறப்புப் பெயர் :கிறித்துவக் கம்பர்

இரா.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- ஹென்றி ஆல்பிரட் என்பதன் சுருக்கமே எச்,ஏ, என்பது ஆகும்,
- இரட்சணிய யாத்திரிகத்துள் இடையிடையே 'தேவாரம் என்னும் பெயரிலமைந்த இசைப்பாடல்கள் நெஞ்சுருகச் செய்யும் நீர்மையன,

**பாவலேறு பெருஞ்சித்தனார்**

- இயற்பெயர் : துரை மாணிக்கம்
- ஊர் : சமுத்திரம் ( சேலம்)
- பெற்றோர்: துரைசாமி , குஞ்சம்மாள்
- நூல்கள் கனிச்சாறு , ஐயை , கொய்யாக்க்கனி ,பாவியக்கொத்து , பள்ளிப் பறவைகள் , நூறாசிரியம்
- நடத்திய இதழ்கள் : தென்மொழி , தமிழ்ச்சிட்டு , தமிழ் நிலம்

**மீரா**

- பெயர் : மீ.இராசேந்திரன்
- பிறந்த ஊர் : சிவ கங்கை
- பணி : பேராசிரியர் , முதல்வர் – சிவகங்கை கல்லூரி
- நூல்கள் மூன்றும் ஆறும் , கோடையும் வசந்தமும் , ஊசிகள் , கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் , குக்கூ , வா இந்த பக்கம் , மீரா கட்டுரைகள்
- விருது : தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு , பாவேந்தர் விருது , சிற்பி இலக்கிய விருது தமிழ் சான்றோர் பேரவை விருது

**மாணிக்க வாசகர்**

- சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர்
- ஊர் : திருவாதவூர் ( மதுரை)
- ப்ணி : அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சர்
- அழுது அடியடைந்த அன்பர்
- நூல்கள் திருவாசகம் , திருக்கோவை
- இவர் எழுப்பிய கோவில் திருப்பெருந்துறையில் ( புதுக்கோட்டை மாவட்டம் ) உள்ளது . கோவில் பெயர் ஆவுடையார் கோவில்
- காலம் 9 ஆம் நூற்றாண்டு

**கணித மேதாவியார்**

- ஏலாதியின் ஆசிரியர்
- சமண சமயத்தவர்
- கொல்லாமை பற்றிய கருத்துக்கள்
- 5 ஆம் நூற்றாண்டு
- நூல் : திணைமாலை நூற்றைம்பது

**சாலை இளந்திரையன்**

- பெற்றோர் : இராமையா அன்னலட்சுமி
- ஊர் : சாலை நயினார் பள்ளிவாசல் ( திரு நெல்வேலி )

ஸ்ரீ சிவா 8015118094

- பணி தில்லி பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத்தலைவர்
- 1991 ல் தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்றவர்
- நூல் : பூத்தது மானுடம் , புரட்சி முழக்கம் , உரை வீச்சு
- உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகம் , தில்லித் தமிழ் எழுத்தாளர் சங்கம் , உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் , இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் தோன்றக் காரணமானவர்

### இளங்கோவடிகள்

- சேர மரபினர்
- பெற்றோர் : இமய வரம்பன் நெடு ஞ்சேரலாதன் , நற்சோனை
- தமையர் : சேரன் செங்குட்டுவன்
- துறவு பூண்டு குணவாயிற்கோட்டத்தில் தங்கினார்
- சமய வேறுபாடற்ற துறவி
- யாமறிந்த புலவரிலே என இவரை பாரதியார் புகழ்கிறார்

### திரு நாவுக்கரசர்

- தேவாரம் இயற்றியவர்
- 4 சைவ சமய பெரியார்களுள் ஒருவர்
- ஊர் : திருவாமூர் ( கடலூர் – பண்ருட்டி)
- பெற்றோர் : புகழனார் , மாதினியார்
- தமக்கை : திலகவதியார்
- இயற்பெயர் : மருணீக்கியார், தரும சேனர்
- வேறு பெயர்கள் தருமசேனர் , அப்பர் , வாகீசர் , தாண்டக வேந்தர்
- சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர்
- காலம் : 7 ஆம் நூற்றாண்டு
- இவர் என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் திருவாக்கைத் தந்தவரும் அதன்படியே வாழ்ந்தவருமாவார்
- பன்னிரு திருமுறைகளுள் முதல் 7 தேவாரம்
- திருஞான சம்பந்தர் தேவாரம் – 3 , திருநாவுக்கரசர் தேவாரம் 3 சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் 1
- முதலாம் மகேந்திரவர்ம பல்லவனால் கல்லைக் கட்டிப் கடலில் போட்டாலும் மிதந்து வந்தவர் திரு நாவுக்கரசர்

### உமறுப் புலவர்

- சீறாப்புராணம் இயற்றியவர்
- எட்டயபுரம் கடிகை முத்துப் புலவரின் மாணவர்
- அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோலின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணம் எழுதினார்
- சீதக்காதியின் மறைவுக்குப் பின் அபுல்காசிம் என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் முடிந்தது
- முதுமொழி மாலை இயற்றியவர்
- காலம் 17 ஆம் நூற்றாண்டு
- இவர் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த நாகலாபுரம் என்னும் ஊரினர்,

சிவா 8015118094

www.Padasalai.Net



- இவர் தந்தையார் செய்குமுகமது அலியார் என்னும் சேகு முதலியார் ஆவர்,
- அண்ணலார் வரலாறு முழுவதும் சீறாவில் நிறைவு செய்யப்படவில்லை என்பதும் பனுஅகுமது மரைக்காயர் என்பார் எழுதி முடித்தார் என்பதும் 'அது சின்னச் சீறா என்று வழங்கப்படுகிறது என்பதும் குறிக்கத்தக்கன,
- உமறுப்புலவர் முதுமொழிமாலை. சீதக்காதி நொண்டி நாடகம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்,

**கவிஞர் அப்துல்ரகுமான்**

- கவிஞர் அப்துல்ரகுமான் 1937 இல் மதுரையில் பிறந்தவர்,
- வாழும் கவிஞரான இவர் 'மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர்; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர் என்று பாராட்டப்படுபவர்,
- புதுமை மணங்கமழும் இவர் படைப்புகள் பல, பால்வீதி. நேயர்விருப்பம். சொந்தச்சிறைகள். கரைகளே நதியாவதில்லை. விலங்குகள் இல்லாத கவிதை என்பன அவற்றுட் சில,
- வாணியம்பாடி இஸ்லாமிய கலைக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.
- தமிழக அரசின் 'பாரதிதாசன் விருது, தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் 'தமிழ் அன்னை விருது முதலான விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்,

**கபிலர்**

- கபிலர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரிலே அந்தணர் மரபில் பிறந்தவர்,
- கடைச்சங்கப் புலவர்கள் பரணர். இடைக்காடர். ஔவை ஆகியோரிடம் நட்பு பூண்டவர்,
- கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பாரியை உயிர்த் தோழனாகக் கொண்டவர்,
- பாரியின் அவைக்களப் புலவராகவும் விளங்கியவர்,
- குறிஞ்சித் திணைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்,
- 'கபிலரது பாட்டு என்னும் தொடரே இவர் பாட்டுத் திறனுக்குச் சான்றாகும்,
- கபிலரை "வாய்மொழிக் கபிலன் என்று நக்கீரரும். "நல்லிசைக் கபிலன் என்று பெருங்குன்றூர்க் கிழாரும் "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன் என்று பொருந்தில் இளங்கீரனாரும். "புலனழுக்கற்ற அந்தணாளன் பொய்யா நாவிற் கபிலன் என மாறோக்கத்து நப்பசலையாரும் புகழ்ந்துள்ளனர்,

**தாரமங்கலம் திரு, அ வரதநஞ்சையப் பிள்ளை**

- தமிழரசி குறவஞ்சியை இயற்றியவர் தாரமங்கலம் திரு, அ வரதநஞ்சையப் பிள்ளை ஆவார்,
- 1–9–1877 இல் அப்பாசாமிப் பிள்ளை. வரதாயி என்பார்க்கு மகனாகத் தோன்றினார்,
- தெலுங்கையும் வடமொழியையும் நன்கு அறிந்தவர், விரைந்து கவி பாடுவதில் வல்லவர்,
- கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 'ஆசிரியர் என்னும் சிறப்புப்பட்டம் பெற்றவர்,
- கற்றோரால் 'புலவரேறு என்று சிறப்பிக்கப் பெற்றார்,
- கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நமச்சிவாய முதலியார் தலைமையில் 'தங்கத் தோடா பரிசளிக்கப் பெற்றார்,
- தமிழவேள் உமாமகேசுவரனார் இவரிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க. இவர் தமிழரசி குறவஞ்சியை இயற்றினார், அந்நூலைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவின் பொழுது ஞானியாரடிகள் தலைமையில் அரங்கேற்றினார்,
- 11–7–1956 அன்று புகழுடம்பு எய்தினார்,

**கவிஞர் ஆலந்தூர் கோ, மோகனரங்கன்**

- கவிஞர் ஆலந்தூர் கோ, மோகனரங்கன் 1–6–1942 இல் சென்னையை அடுத்த ஆலந்தூரில் பிறந்தவர்,

இரா சிவா 8015118094

- இவர் பெற்றோர் ம,கோபால்; கோ, மீனாம்பாள்,
- இவருடைய "இமயம் எங்கள் காலடியில் என்னும் கவிதைத் தொகுப்புநூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது,
- வானொலி. தொலைக்காட்சி. பாவரங்கமேடை இவற்றுள் ஏதேனும் ஒன்றனுள் இவர் தமிழ் ஒலித்துக் கொண்டே இருக்கும்

**சுந்தரர்**

- சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் தோன்றினார்,
- இவர் பெற்றோர் சடையனார் – இசை ஞானியார் ஆவர்,
- இவர்தம் பிள்ளைத் திருப்பெயர் நம்பியாரூரர் என்பதாம், இவர் திருமுனைப் பாடி நாட்டையாண்ட நரசிங்க முனையரையர் என்ற சிற்றரசரால் மகன்மை கொண்டு வளர்க்கப்பட்டார்,
- சிவபெருமான் இவரைத் தம் தோழராகக் கொண்டமையால் தம்பிரான் தோழர் என்றும் அழைக்கப்படுகிறார், அந்த நட்பின் உரிமையைச் சுந்தரர் தேவாரத்தில் பரக்கக் காணலாம்,
- இவர் எழுதிய திருத்தொண்டத் தொகை என்னும் நூலையே முதனூலாகக் கொண்டு சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணம் எழுந்தது,
- இவர் காலம் கி,பி, ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி,

**ஒட்டக்கூத்தர்**

- இராசராசசோழனுலாவைப் பாடியவர் ஒட்டக்கூத்தர்,
- கவிச்சக்கரவர்த்தி. கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படும் ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன். இரண்டாம் குலோத்துங்கன். இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று மன்னர்களின் அவையிலும் செல்வாக்கோடு விளங்கியவர், அம்மூவரைப் பற்றியும் அவர் பாடிய மூன்று உலாக்களும் மூவருலா எனப்படுகிறது,
- தக்கயாகப்பரணி. குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் முதலியன இவர் இயற்றிய வேறு நூல்கள் ஆகும்,
- கூத்தர் என்பதே இவர் இயற்பெயர்,
- ஒட்டம் (பந்தயம்) வைத்துப்பாடுவதில் வல்லவர் ஆதலால் இவர் ஒட்டக்கூத்தர் எனப்பட்டார்,
- இவரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும்,

**ஆழ்வார்கள்**

- ஆழ்வார்கள் பன்னிருவரால் அருளப்பட்டது நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் என்னும் அருந்தமிழ்ப் பனுவல்,
- ஆழ்வார் என்னுஞ் சொல்லுக்கு ஆழ்ந்தறியும் அறிவைக் கருவியாக உடையவர் என்றும் எம்பெருமானுடைய மங்கலக் குணங்களில் ஆழங்காற்பட்டவர் என்றும் பொருள் கூறுவர்,
- குலசேகர ஆழ்வார் சேரநாட்டுத் திருவஞ்சிக் களத்தில் தோன்றியவர், இவர் எழுதிய பாடல்கள் பெருமாள் திருமொழி எனப்படும், அவை மொத்தம் 105 பாடல்களாகும்,
- ஆழ்வார்களின் அருளிச் செயலுக்குப் பெரிய வாச்சான் பிள்ளை என்பார் உரை எழுதியுள்ளார், திருவாய்மொழிக்கு வடக்குத் திருவீதிப் பிள்ளை என்பார் எழுதிய ஈடு என்னும் பேருரை ஆழமும் அகலமும் உடையதாகும்

**பேராசிரியர் பெ, சுந்தரம்பிள்ளை**

- பேராசிரியர் பெ, சுந்தரம்பிள்ளை கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் ஊரிற் பிறந்தார்,
- தந்தை –பெருமாள் பிள்ளை. தாய்– மாடத்தி அம்மையார்,

இரா சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்,
- கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பவரைத் தமது ஞானாசிரியராகக் கொண்டு ஒழுகி வந்தார், இவர் காலம் 1897 (19 ஆம் நூற்றாண்டு)
- இவரியற்றிய பிறநூல்கள் : நூல் தொகை விளக்கம். திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி,. திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி என்பன,
- அந்நாளைய சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது, தமிழ்நாடு அரசு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றைநிறுவிப் பெருமைப்படுத்தியுள்ளது,
- இவரது நீராருங்கடலுடுத்த என்றதமிழ் வாழ்த்துப்பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது,

**சேக்கிழார்**

- பெரிய புராணத்தை இயற்றியவர்
- பிறந்த இடம் : குன்றத்தூர் ( கா ஞ்சிபுரம்)
- இயற்பெயர் : அருண்மொழித்தேவர்
- பணி : அ நு பாயச் சோழனிடம் தலைமை அமைச்சர்
- பட்டம் உத்தம சோழப் பல்லவர் , தெய்வச் சேக்கிழார் தொண்டர்சீர் பரவுவார்
- காலம் 12 ஆம் நூற்றாண்டு

**மதுரைக் கண்க்காயனார் மகனார் நக்கீரனார்** . இவர் இறையனார் எழுதிய களவியலுக்கு உரை கண்டவர் . பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படையையும் , நெடு நல்வாடையையும் இயற்றியவர்

**குலசேகர ஆழ்வார்**

- பிறப்பு : திருவஞ்சைக்களம் ( கேரளா )
- இராமனிடம் பக்தி கொண்டவர்
- வேறு பெயர் : குலசேகரப் பெருமாள்
- 12 ஆழ்வார்களில் ஒருவர்
- இவர் அருளிய பெருமாள் திருமொழி நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் ஒன்று இதில் 105 பாசுரங்கள் உள்ளன
- வடமொழி , தென்மொழி இரண்டிலும் வல்லவர்
- தமிழில் பெருமாள் திருமொழி , வடமொழியில் முகுந்த மாலை எனும் நூலையும் இயற்றியுள்ளார்
- திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியவர்

**சிற்பி பாலசுப்பிரமணியம்**

- கோவைமாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சி என்றஊரைச் சார்ந்தவர் சிற்பி பாலசுப்பிரமணியம்,
- பெற்றோர் – பொன்னுசாமி. கண்டியம்மாள்
- கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர், சொல்லைத் தேர்ந்து செதுக்கித் தமிழ்ப்பாடல் ஆக்கும் சிற்பி, பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்,

இரா.சிவா 8015118094

TNTET TAMIL PAPER I & II R.Siva M.Sc., B.Ed., B.T Asst
Cell : 8015118094 sivatvmalai@yahoo.co.in

- சிரித்த முத்துக்கள். நிலவுப்பூ. ஒளிப்பறவை. சர்ப்பயாகம். சூரிய நிழல். ஆதிரை முதய பல கவிதை நூல்களை ஆக்கியவர்,
- இலக்கியச் சிந்தனை. மலையாளக் கவிதை. அலையும் சுவடும். ஒரு கிராமத்து நதிக்கரையில் என்னும் உரைநடை நூல்களை எழுதியவர்,
- ஒரு கிராமத்து நதி என்ற நூலுக்குச் சாகித்திய அகாதமியின் பரிசு வழங்கப்பட்டுள்ளது,
- தமிழக அரசின் பாவேந்தர் பரிசு. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆங்கில இலக்கிய நூற்பரிசு போன்றபரிசுகளையும் பெற்றுள்ளார்,

### நா, காமராசன்

- நா. காமராசன் 1942–ல் மதுரை மாவட்டம் போடி–மீனாட்சிபுரம் கிராமத்தில் பிறந்தார்,
- தந்தை நாச்சிமுத்து; தாயார் இலட்சுமி அம்மாள்,
- மறுமலர்ச்சி யுகத்தின் கவிஞனாகத் திகழும் காமராசன் அவர்கள் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் எழுதித் தமிழ் மொழிக்கு வளஞ் சேர்த்துள்ளார்,
- கிராமியச் சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றைஎழுதியுள்ளார்,
- 1971–ல் வெளிவந்த கறுப்பு மலர்கள் தொகுப்பு நூல். கவிதை உலகில் ஒரு திருப்பத்தை உருவாக்கியதென அறிஞர்கள் புகழ்வர்,
- சூரியகாந்தி. சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள். தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும் முதயன இவர்தம் படைப்புகளாகும்

### நல்லாதனார்.

- திரிகடுகம் ஆசிரியர் நல்லாதனார்.
- திரு நெல்வேலி மாவட்டம் திருத்து எனும் ஊரினர் .
- இவரை செருஅடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடுவதால் இவர் போர் வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது

### வேத நாயகம் பிள்ளை

பெற்றோர் சவரி முத்து – அரோக்கிய மாரியம்மை

- ஊர் : திருச்சி பக்கத்திலுள்ள குளத்தூர்
- தமிழின் முதல் புதினம் பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர்
- பிற நூல்கள் : நீதி நூல் திரட்டு ,பெண்மதி மாலை , சர்வ சமயக் கீர்த்தனைகள்

### முனைவர் பார்த்தசாரதி

- பெற்றோர் சனார்த்தனம் – கண்ணம்மாள்
- வடமொழியில் உள்ள சாகுந்தலம் எனும் நாடகத்தை தமிழில் மொழி பெயர்த்தார்
- வட மொழியில் உள்ள சுப்ரபாரதத்தை தமிழில் மொழி பெயர்த்தார்
- 2002 ல் சிறந்த இலக்கிய நூல் பரிசு பெற்றார்

### பூத ஞ்சேந்தனார்

மதுரைத்தமிழ் ஆசிரியர் மகன்
காலம் 2 ஆம் நூற்றாண்டு
ஊர் : மதுரை

ஈரா.சிவா 8015118094

**க . சச்சிதானந்தன்**

- ஊர் : இலங்கை யாழ்ப்பாணம் பருத்தி துறை
- பணி : விரிவுரையாளர் – ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி
- புலமை : தமிழ் ஆங்கிலம் சமற்கிருதம் மொழிகளில்
- படைப்புகள் ஆனந்ததேன் ( கவிதைத்தொகுதி 1954 ) அன்ன பூரணி ( புதினம் ) யாழ்ப்பானக் காவியம்
- சிறப்பு: மகாவித்துவான் நவ நீத கிருட்டின மாரதியாரின் மகன்
- இவர் பாடல்கள் பாரதியாரின் சினப்போக்கையும் , கம்பரின் மிடுக்கையும் ஒருமித்து இருக்கும்

**மொழிவளங் காட்டும் இலக்கிய வளங்கள்:**

- ‘தமிழின் முதல் இலக்கணநூல் தொல்காப்பியம்: 3 அதிகாரம். 27 இயல்கள். 1610 நூற்பாக்கள்,
- தமிழரின் வாழ்வியறீலக்கணமான வள்ளுவம்: 3 பால்கள். 133 அதிகாரங்கள். 1330 குறட்பாக்கள்,
- சிலப்பதிகாரம்: 3 காண்டம். 30 காதைகள். 5001 வரிகள்,
- மணிமேகலை: 30 காதைகள். 4755 வரிகள்,
- சீவகசிந்தாமணி: 13 இலம்பகங்கள். 3145 பாடல்கள்,
- பெரியபுராணம்: 2 காண்டம். 13 சருக்கங்கள். 4286 பாடல்கள்,
- கம்பராமாயணம்: 6 காண்டங்கள். 118 படலங்கள். 10589 பாடல்கள்,
- நல்லாப்பிள்ளை பாரதம்: 18 பருவங்கள். 11000 பாடல்கள்,
- கந்தபுராணம்: ஆறுகாண்டம். 135 படலம். 10345 பாடல்கள்,
- திருவிளையாடற்புராணம் : மூன்று காண்டம். 3363 பாடல்கள்,
- தேம்பாவணி: 3 காண்டம்; 36 படலங்கள். 3615
- பாடல்கள், சீறாப்புராணம் : 3 காண்டம் 92 படலங்கள். 5027 பாடல்கள்,
- இரட்சணிய யாத்திரிகம் : 5 பருவங்கள். 47 படலங்கள். 3776 பாடல்கள்,
- இராவணகாவியம் : 5 காண்டம் 57 படலங்கள் 3100 விருத்தங்கள்,
- ஏசு காவியம் : ஐந்துபாகம். 149 அதிகாரம். 810 விருத்தங்களும் 2346 அகவலடிகளும் கொண்டது

ஆசிரியர் தகுதித் தேர்வு கணிதம் மற்றும் தமிழ் வினாக்களுக்கான முழுமையான பாடத்தொகுப்பு தொடர்பிற்கு

இரா.சிவா
பட்டதாரி ஆசிரியர்
திருவண்ணாமலை
8015118094
sivatvmalai@yahoo.co.in

**தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்**

இரா சிவா 8015118094